வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2016

வழக்கு சாட்சி - PW 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.முருகாசலம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கண்ணையன் | தொழில் | : | துணை காவல் கண்காணிப்பாளர் |
| கிராமம் | : | திருப்பூர் மாவட்ட குற்ற பதிவேடு ஆவண கூடம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 04.12.2024.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 04.12.2024.**

1) நான் தற்போது திருப்பூர் மாவட்ட குற்ற பதிவேடு ஆவண கூடத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.10.2015 ஆம் தேதி நான் திருப்பூர் மாவட்டம், அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அவிநாசிபாளையம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.கருணாகரன் என்பவரால் பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பை எனது புலன் விசாரணைக்கு வைக்கப்பட்ட அவிநாசிபாளையம் காவல்நிலைய குற்ற எண்.609/2015, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச வழக்கின் கோப்பை பெற்று மறுநாள் காலை 08.10.2015 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஆறுமுகம், மாதவன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் மட்டும் அ.சா.ஆ.6** ஆகும்.

2) பின்னர் சாட்சிகளை விசாரித்தும், பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருப்பூர் அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன ரேணுகாதேவி என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில் 8.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேத விசாரண அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத**

**விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் சாட்சிகள் மணிகண்டன், ராஜன், ராஜாமணி, ஆறுமுகம், சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இறப்பின் காரணம் அறியும்பொருட்டு பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக காவலர் 773 செல்லதுரை என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.

3) பின்னர் சாட்சிகள் ஆறுமுகம், மாதவன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் 09.10.2015 ஆம் தேதி வழக்கின் எதிரி செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜரானவரை விசாரித்து கைதுக்கான காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் பிணையில் வித்தேன். அன்றே எதிரி ஓட்டி வந்த வாகனம் TCI 7666 ஈச்சர் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன்.

4) பின்னர் 27.10.2015 ஆம் தேதி இறந்துபோன நபரின் வாகனம் TN 37 AW 0523TVS XL Super வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 03.11.2015 ஆம் தேதி வாகனங்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியமூர்த்தி, நடேசன் ஆகியோர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்கு மூலம் பதிவு செய்தேன்.

5) இவ்வழக்கில் இறந்துபோன ரேணுகாதேவி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முத்துவேல் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பிரேத **பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து அன்றே எதிரி மீது 279, 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

6) எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்து வைக்கப்படுகிறது.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.12.04 18:36:57 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.